ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

பிள்ளைப்பெருமாளையங்கார் பாடியருளிய

# சீரங்கநாயகரூசல்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமானுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# சீரங்கநாயகரூசல்

## தனியன்

அண்டப் பந்தரில் பற்றுக் கால்களாக
அறிவு விட்டம் கரணம் சங்கிலிகளாகக்
கொண்ட பிறப்பே பலகை வினை அசைப்போர்
கொடு நரக சுவர்க்கப் பூ வெளிகள் தம்மில்
தண்டல் இல் ஏற்றம் இறக்கம் தங்கல் ஆகத்
தடுமாறி இடர் உழக்கும் ஊசல் மாறத்
தொண்டர்க்கா மணவாளர் பேரர் கூடித்
தொகுத்திட்டார் திருவரங்கத்தூசல் தானே

## காப்பு

புதுவைநகர்ப் பட்டர்பிரான் சரண்கள் போற்றி
பொய்கை பூதன் பேயார் பாதம் போற்றி
சதுமறைச் சொல் சடகோபன் சரணம் போற்றி
தமிழ்ப்பாணன் தொண்டரடிப்பொடி தாள் போற்றி
முதுபுகழ் சேர் மழிசையர் கோன் பதங்கள் போற்றி
முடிக்குலசேகரன் கலியன் கழல்கள் போற்றி
மதுரகவி எதிராசன் கூரத்தாழ்வான்
வாழ்வான பட்டர் திருவடிகள் போற்றி

## நூல்

திருவாழத் திருவாழி சங்கம் வாழத்
திருவனந்தன் கருடன் சேனையர்க்கோன் வாழ
அருள் மாறன் முதலாம் ஆழ்வார்கள் வாழ
அளவில் குணத்தெதிராசன் அடியார் வாழ
இருநாலு திருவெழுத்தின் ஏற்றம் வாழ
ஏழ் உலகும் நான்மறையும் இனிது வாழப்
பெருவாழ்வு தந்தருள் நம்பெருமாள் எங்கள்
பெரிய பெருமாள் அரங்கர் ஆடிர் ஊசல் ‖ **1** ‖

உயர இட்ட கற்பகப் பூப்பந்தர் நீழல்
ஒள் பவளம் கால் நிறுவி ஊடு போட்ட
வயிர விட்டத்தாடகச் சங்கிலிகள் நாற்றி
மரகதத்தால் பலகை தைத்த ஊசன் மீதே
தயிரில் இட்ட மத்துழக்கும் வெண்ணெய்க்காடித்
தட மறுகில் குடம் ஆடித் தழல் வாய் நாகம்
அயர இட்டன்றாடிய நீர் ஆடிர் ஊசல்
அணியரங்கர் நம்பெருமாள் ஆடிர் ஊசல் ‖ **2** ‖

மீன் பூத்த விசும்பது போல் தரளம் கோத்து
விரித்த நீலப்பட்டு விதானம் தோன்ற
வான் பூத்த கலை மதிபோல் கவிகை ஓங்க
மதிக்கதிர் போல் கவரி இருமருங்கும் வீசக்
கான் பூத்த தனிச்செல்வன் சிலையுள் மின்னல்
கருமுகில் போல் கணமணி வாசிகையின் நாப்பண்
தேன் பூத்த தாமரையாள் மார்பில் ஆடத்
தென்னரங்க மணவாளர் ஆடிர் ஊசல் ‖ **3** ‖

prapatti.com
sundar kidambi

பூசுரரும் புரவலரும் வானநாட்டுப்
புத்தேளிர் குழுவும் அவர் பூவைமாரும்
வாசவனும் மலர் அயனும் மழுவலானும்
வணங்குவான் அவசரம் பார்த்திணங்குகின்றார்
தூசுடைய கொடித் தடந்தேர் மானம் தோன்றச்
சுடர் இரண்டும் பகல் விளக்காத் தோன்றத் தோன்றும்
தேசுடைய திருவரங்கர் ஆடிர் ஊசல்
சீரங்கநாயகியோடாடிர் ஊசல் ‖ **4** ‖

மலைமகளும் அரனும் ஒருவடம் தொட்டாட்ட
வாசவனும் சசியும் ஒருவடம் தொட்டாட்டக்
கலைமகளும் அயனும் ஒருவடம் தொட்டாட்டக்
கந்தனும் வள்ளியும் கலந்தொருவடம் தொட்டாட்ட
அலைமகரப் பாற்கடலுள் அவதரித்த
அலர்மகளும் நிலமகளும் ஆயர் காதல்
தலைமகளும் இரு மருங்கில் ஆட எங்கள்
தண் அரங்க மணவாளர் ஆடிர் ஊசல் ‖ **5** ‖

திருவழுதி வளநாடன் பொருநைச் சேர்ப்பன்
சீபராங்குச முனிவன் வகுளச்செல்வன்
தரு வளரும் குருகையர் கோன் காரி மாறன்
சடகோபன் தமிழ் வேதம் ததியர் பாடக்
கருணை மொழி முகமதியம் குறுவேர்வாடக்
கரிய குழல் கத்தூரி நாமத்தாட
அருகிருக்கும் தேவியர்கள் அது கொண்டாட
அணி அரங்கத்தெம்பெருமான் ஆடிர் ஊசல் ‖ **6** ‖

வையம் ஒரு பொன் தகட்டுத் தகளியாக
வார்கடலே நெய்யாக அதனுள் தேக்கி
வெய்யகதிர் விளக்காகச் செஞ்சொல் மாலை
மெல் அடிக்கே சூட்டினான் மேன்மைப் பாடத்
துய்ய மதி மண்டலத்தின் மறுவே ஒப்பச்
சோதி விடு கத்தூரி துலங்கு நாமச்
செய்யதிருமுகத்தரங்கர் ஆடிர் ஊசல்
சீரங்கநாயகியோடாடிர் ஊசல் ‖ **7** ‖

அன்பென்னும் நன்பொருள் ஓர் தகளியாக
ஆர்வமே நெய்யாக அதனுள் தேக்கி
இன்புருகு சிந்தை இடு திரியா ஞானத்து
இலகு விளக்கேற்றினான் இசையைப் பாடப்
பொன் புரையும் புகழ் உறையூர் வல்லியாரும்
புதுவை நகர் ஆண்டாளும் புடை சேர்ந்தாட
முன்பிலும் பின்பழகிய நம்பெருமாள் தொல்லை
மூவுலகுக்கும் பெருமாள் ஆடிர் ஊசல் ‖ **8** ‖

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் என்ற
திகழ் அருக்கன் அணி நிறமும் திகிரி சங்கும்
இருள் கொண்ட கருங்கங்குல் இடையே கோவல்
இடை கழியில் கண்ட பிரான் ஏற்றம் பாட
மருக்கொண்ட கொன்றையான் மலரின் மேலான்
வானவர் கோன் முதலானோர் மகுட கோடி
நெருக்குண்ட தாள் அரங்கர் ஆடிர் ஊசல்
நீளைக்கு மணவாளர் ஆடிர் ஊசல் ‖ **9** ‖

prapatti.com sundersarukkai@gmail.com Sunder Kidāmbi

நான்முகனை நாரணனே படைத்தான் அந்த
    நான்முகனும் நக்கபிரானைப் படைத்தான்
யான் முகமாய் அந்தாதி அறிவித்தேன் என்று
    யார்க்கும் வெளியிட்ட பிரான் இயல்பைப் பாடப்
பால்முகம் ஆர் வளை நேமி படைகள் காட்டப்
    பாசடைகள் திருமேனிப் படிவம் காட்டத்
தேன்முகம் மா முளறி அவயவங்கள் காட்டச்
    செழும் தடம் போல் அரங்கேசர் ஆடிர் ஊசல் ‖ **10** ‖

மருள் இரிய மறம் இரிய அனைத்துயிர்க்கும்
    மயல் இரிய வினை இரிய மறையின் பாடல்
இருள் இரிய என்றெடுத்துத் தொண்டர் தங்கள்
    இடர் இரிய உரைத்த பிரான் இட்டம் பாட
அருள் இரிய அறம் இரிய உலகை ஆண்ட
    ஆடகத்தோன் அகம்பரன் என்றபிமானித்த
பொருள் இரியச் சொல் இரிய மார்வம் கீண்ட
    பொன்னி சூழ் திருவரங்கர் ஆடிர் ஊசல் ‖ **11** ‖

அரன் என்றும் அயன் என்றும் புத்தன் என்றும்
    அலற்றுவார் முன் திருனாரணனே ஆதி
பரன் என்று மறை உரைத்துக் கிழி அறுத்த
    பட்டர்பிரான் பாடிய பல்லாண்டு பாடக்
கரன் என்ற மாரீசன் கவந்தன் என்ற
    கண்டகர் ஆருயிர் மடியக் கண்டிலங்கா
புரம் வென்ற சிலை அரங்கர் ஆடிர் ஊசல்
    புகழ் உறையூர் வல்லியோடாடிர் ஊசல் ‖ **12** ‖

prapatti.com
sunder kidāmbi

மருமாலைப் பசுந்துளவத் தொடைகளோடு
 வைகறையில் வந்து திருத்துயில் உணர்த்தித்
திருமாலை திருவடிக்கே சூட்டி நிற்கும்
 திருமண்டங்குடிப் பெருமான் சீர்மை பாடப்
பெருமாலை அடைந்துலகம் மதிமயங்கப்
 பேணாதார் படக் கதிரோன் காணாதேக
ஒரு மாலை பகலில் அழைத்தொளித்த நேமி
 ஒளி உள்ளார் அரங்கேசர் ஆடிர் ஊசல் ‖ **13** ‖

காரங்கத் திருவுருவம் செய்ய பாத
 கமலம் முதல் முடி அளவும் கண்டு போற்றச்
சாரங்கமுனியை ஊர்ந்தமலனாதி
 தனை உரைத்த பாண்பெருமாள் தகைமை பாட
ஆரம் கொள் பாற்கடல் விட்டயனூர் ஏறி
 அயோத்தி நகர் இழிந்து பொன்னி ஆற்றில் சேர்ந்த
சீரங்க மணவாளர் ஆடிர் ஊசல்
 சீரங்கநாயகியோடாடிர் ஊசல் ‖ **14** ‖

விழி பறித்து வெள்ளியை மாவலியை மண்ணும்
 விண்ணுலகும் பறித்த குறள் வேடத்தும்மை
வழி பறித்து மந்திரம் கொண்டன்பர் தங்கள்
 வல்வினையைப் பறித்த பிரான் வண்மை பாடச்
சுழி பறித்த கங்கை முடி அடியில் தோயத்
 தொழுதிரக்கும் முக்கணன் நான்முகனைச் செய்த
பழி பறித்துப் பலி ஒழித்தார் ஆடிர் ஊசல்
 பள்ளி கொண்ட திருவரங்கர் ஆடிர் ஊசல் ‖ **15** ‖

போதனார் நெட்டெழுத்தும் நமனார் இட்ட
குற்றெழுத்தும் புனல் எழுத்தாய்ப்போக மாறன்
வேதம் ஆயிரம் தமிழும் எழுதி அந்நாள்
மேன்மை பெறு மதுரகவி வியப்பைப் பாட
ஓதம் ஆர் மீன் வடிவாய் ஆமை ஏனத்து
உருவாகி அரி குறள்மூ இராமர் ஆகிக்
கோதிலாக் கண்ணனாய்க் கற்கியாகும்
கோயில் வாழ் அரங்கேசர் ஆடிர் ஊசல் ‖ **16** ‖

ஆர் அமுதின் இன்பமிகு சடகோபன் சொல்
ஆயிரமும் தெரிந்தெடுத்தடியார்க்கோதி
நாரதனும் மனம் உருக இசைகள் பாடு
நாதமுனி திருநாம நலங்கள் பாடப்
பார் அதனில் பாரதப் போர் முடிய மூட்டிப்
பகை வேந்தர் குலம் தொலையப் பார்த்தன் தெய்வத்
தேர் அதனில் வரும் அரங்கர் ஆடிர் ஊசல்
சீரங்கநாயகியோடாடிர் ஊசல் ‖ **17** ‖

வம்பமரும் சிகை முன்னூல் தரித்த ஞானி
வாதியரை வெல் ஆளவந்தார்க்கன்பு
ஆம் எம்பெருமானார்க்கெட்டும் இரண்டும் பேசி
இதம் உரைத்த பெரியநம்பி இரக்கம் பாடத்
தும்புரு நாரதர் நாத கீதம் பாடத்
தொண்டர் குழாம் இயல் பாடச் சுருதி பாட
நம்பெருமாள் திருவரங்கர் ஆடிர் ஊசல்
நான்முகனார் தாதையார் ஆடிர் ஊசல் ‖ **18** ‖

ஐங்கோலும் ஒரு கோலும் நீர்க் கோலம் போல்
அழிய முனிந்தறு சமயம் அகற்றி எங்கள்
செங்கோலே உலகனைத்தும் செல்ல முக்கோல்
திருக்கையில் கொள் எதிராசன் செயத்தைப் பாடச்
சங்கோலமிடும் பொன்னித் துறையின் நின்றே
தவழ்ந்தேறி மறுகு தொறும் தரளம் ஈனும்
நம் கோயில் நம்பெருமாள் ஆடிர் ஊசல்
நக்கன் மூதாதையர் ஆடிர் ஊசல் ॥ **19** ॥

அவத்தப்புன் சமயச் சொல் பொய்யை மெய் என்று
அணி மிடறு புழுத்தான் தன் அவையின் மேவிச்
சிவத்துக்கு மேல் பதக்குண்டென்று தீட்டும்
திருக்கூர வேதியர் கோன் செவ்வி பாடப்
பவத்துக்கம் பிணி நீங்க நரகம் தூரப்
பரமபதம் குடி மலியப் பள்ளி கொள்ளும்
நவத்துப்புச் செங்கனி வாய்க் கரிய மேனி
நம்பெருமாள் அரங்கேசர் ஆடிர் ஊசல் ॥ **20** ॥

சந்தாடும் பொழில் பூதூர் முக்கோற் செல்வன்
தன் மருமகன் ஆகி இரு தாளும் ஆன
கந்தாடைக் குல தீபன் முதலியாண்டான்
கடல் ஞாலம் திருத்தியருள் கருணை பாடக்
கொந்தாரும் துளவாடச் சிறை வண்டாடக்
குழல் ஆட விழி ஆடக் குழைக்காதாட
நந்தாடக் கதை ஆடத் திகிரி ஆட
நன்மாடத் திருவரங்கர் ஆடிர் ஊசல் ॥ **21** ॥

திருக்கலியன் அணுக்கர் திருப்பணி செய் அன்பர்
சீரங்க நான்மறையோர் உள்ளூர்ச் செல்வர்
தருக்கும் இசைப்பிரான்மார் பார் அளந்தார் பாதம்
தாங்குவோர் திருக்கரகம் தரித்து நிற்போர்
இருக்கு முதல் விண்ணப்பம் செய்வோர் வீரர்க்கு
இறையவர்கள் சீபுண்டரீகர் மற்றும்
பெருக்கமுள்ள பரிகரங்கள் தொழுதாட்செய்யப்
பிரமமாம் திருவரங்கர் ஆடிர் ஊசல் || **22** ||

உடுத்திரளோ வானவர்கள் சொரிந்த பூவோ
உதித்தெழுந்த கலைமதியோ உம்பர் மாதர்
எடுத்திடு கர்ப்பூர ஆரத்திதானோ
யாம் தெளியோம் இன்று நீள் திருக்கண் சாத்திப்
படுத்த திருப்பாற்கடலுள் நின்று போந்து
பாமாலை பூமாலை பாடிச் சூடிக்
கொடுத்த திருக்கோதையுடன் ஆடிர் ஊசல்
கோயில் மணவாளரே ஆடிர் ஊசல் || **23** ||

வென்றி வேல் கரு நெடுங்கண் அசோதை முன்னம்
வேர்வாட விளையாடும் வெண்ணெய் ஆட்டும்
குன்று போல் நால் தடந்தோள் வீசி ஆடும்
குரவைதனைப் பிணைந்தாடும் கோள் அறாட்டும்
மன்றினூடுவந்தாடும் மரக்கால் ஆட்டும்
வலி அரவில் பாய்ந்தாடும் வடுவில் ஆட்டும்
அன்று காணா இழந்த அடியோம் காண
அணி அரங்கராசரே ஆடிர் ஊசல் || **24** ||

ஆரணங்கள் ஒரு நான்கும் அன்பர் நெஞ்சும்
அணி சிலம்பும் அடி விடாதூசல் ஆட
வார் அணங்கு முலை மடவார் கண்ணும் வண்டும்
வண் துளவும் புயம் விடாதூசல் ஆடக்
காரணங்களாய் அண்டர் அண்டம் எல்லாம்
கமலநாபியில் படைத்துக் காத்தழிக்கும்
சீரணங்கு மணவாளர் ஆடிர் ஊசல்
சீரங்கநாயகனார் ஆடிர் ஊசல் ‖ **25** ‖

அடித்தலத்தில் பரிபுரமும் சிலம்பும் ஆட
அணி மார்பில் கௌத்துவமும் திருவும் ஆடத்
தொடித்தலத்தில் மணிவடமும் துளவும் ஆடத்
துணைக் கரத்தில் சக்கரமும் சங்கும் ஆட
முடித்தலத்தில் கருங்குழலும் சுறும்பும் ஆட
முகமதியில் குறுவேர்வும் குழையும் ஆடக்
கடித்தலத்தில் அரைநாணும் கலையும் ஆடக்
காவிரி சூழ் அரங்கேசர் ஆடிர் ஊசல் ‖ **26** ‖

பரந்தலைக்கும் பாற்கடலுள் பசுஞ்சூற் கொண்டல்
படிந்ததெனக் கிடந்தபடி படிமேல் காட்டி
வரம் தழைக்க இரண்டாற்றின் நடுவே தோன்றி
மண்ணுலகை வாழவைத்த வளத்தைப் பாடப்
புரந்தரற்கும் பெருமாளே ஆடிர் ஊசல்
போதனுக்கும் பெருமாளே ஆடிர் ஊசல்
அரன் தனக்கும் பெருமாளே ஆடிர் ஊசல்
அணி அரங்கப் பெருமாளே ஆடிர் ஊசல் ‖ **27** ‖

உடு மாயக் கதிர் உதிரச் சண்ட வாயு
உலகலைப்ப வடவை சுட உததி ஏழும்
கெடுமாறு திரிதரு கால் உயிர்கள் எல்லாம்
கெடாது வயிற்றுள் இருத்தும் சீர்த்தி பாட
நெடு மாயப்பிறவி எல்லாம் பிறந்திறந்து
நிலத்தோடும் விசும்போடும் நிரயத்தோடும்
தடுமாறித் திரிவேனை அருள் செய்தாண்ட
தண் அரங்க நாயகனார் ஆடிர் ஊசல் ‖ **28** ‖

முருகன் உறை குறிஞ்சித் தேன் முல்லை பாய
முல்லை நிலத் தயிர் பால் நெய் மருதத்தோட
மருதநிலக் கொழும்பாகு நெய்தல் தேங்க
வரு புனல் காவிரி சூழ்ந்த வளத்தைப் பாடக்
கருமணியே மரகதமே முத்தே பொன்னே
கண்மணியே ஆருயிரே கனியே தேனே
அருள் புரிவாய் என்றவர் தம் அகத்துள் வைகும்
அணி அரங்க மாளிகையார் ஆடிர் ஊசல் ‖ **29** ‖

புண்டரிகத்தவன் தவம் செய்திறைஞ்சும் கோயில்
புரிசடையோன் புராணம் செய்தேத்தும் கோயில்
பண்டிரவி குலத்தரசர் பணிந்த கோயில்
பரிந்திலங்கைக் கோன் கொணர்ந்து பதித்த கோயில்
மண்டபமும் கோபுரமும் மதிலும் செம்பொன்
மாளிகையும் தண்டலையும் மலிந்த கோயில்
அண்டர் தொழும் திருவரங்கம் பெரியகோயில்
அமர்ந்துறையும் பெருமானார் ஆடிர் ஊசல் ‖ **30** ‖

அருவரங்கள் தரு பராங்குசனே ஆதி
ஆழ்வார்கள் தம்பிரான் ஆடிர் ஊசல்
இருவர் அங்க ஒளிக்ககலா இருள் அகற்றும்
எதிராசன் தம்பிரான் ஆடிர் ஊசல்
தரு வரங்கர் நீள் பொழில் கூரத்து வேதா
சாரியனார் தம்பிரான் ஆடிர் ஊசல்
திருவரங்கத்தணி அரங்கன் திருமுற்றத்துத்
தெய்வங்கள் தம்பிரான் ஆடிர் ஊசல் ‖ **31** ‖

உணராத மதலை இளங்குதலைச் சொல்லை
உளம் உருகித் தந்தை தாய் உவக்குமாபோல்
தணவாமல் கற்பிப்பார் தம் சொல் கேட்டுத்
தத்தை உரைத்தத்தை ஆதரிக்குமா போல்
பணவாள் அரா முடிமேல் படி ஏழ் போற்றும்
பட்டர் திருத்தாட்கடிமைப்பட்ட காதல்
மணவாளதாசன் தன் புன்சொல் கொண்ட
மதில் அரங்கமணவாளர் ஆடிர் ஊசல் ‖ **32** ‖

போதாரும் நான்முகனே முதலாய் உள்ள
புத்தேளிர் தொழுநாதன் புவனிக்கெல்லாம்
ஆதாரமாம் தெய்வம் ஆன நாதன்
அனைத்துயிர்க்கு நாதன் அணி அரங்கநாதன்
சீத அரவிந்த மலர்த் திருவின் நாதன்
திருவூசல் திருநாமம் ஒரு நால் எட்டும்
வேதாசாரிய பட்டர்க்கடிமையான
வெண்மணிப் பிள்ளைப்பெருமாள் விளம்பினானே ‖ **33** ‖

சீரங்கநாயகரூசல் முற்றிற்று